DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**CC.No. 123/2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW 3 | Caste | : | |
| Name | : | பிரபு | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | அபிராமம் | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 29th day of September 2022.
29.09.2022.

முதல் விசாரணை:-

1. நான் அபிராமத்தில் வசித்து வருகிறேன். ஆட்டோ ஓட்டுனரா பணி செய்து வருகிறேன். அ.சா.1 ஐ நான் பார்த்தது இல்லை. மணிகண்டனை தெரியாது. இந்த வழக்கில் இறந்து போன சசிகுமார் எனது உடன்பிறந்த அண்ணன். கடந்த 22.09.2019-ம் தேதி காலை 11.30 மணியளவில் அ.சா.2 (அத்தாட்சி) போன் மூலம் என்னிடம் எனது அண்ணன் சசிகுமார் வேலைக்கு சென்ற இடத்தில் இருசக்கர வாகனத்தில் விபத்து ஏற்பட்டதாக கூறினார். அதன் பெயரில் இராமநாதபுரம் அரசு மருந்துவமனை சென்று பார்த்த போது அவர் இறந்துவிட்டார். விபத்து பற்றி எந்த விபரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. வழக்கின் விபரம் எல்லாம் போலீசார் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் இல்லை அவர்கள் எதவும் சொல்லவில்லை. பாதிக்கப்ட்ட ஜெயமுருகனையும், எனத அண்ணனையும் எத்தனை மணிக்கு எங்கு வைத்து பார்த்தேன் என்றால் 2.30 மணிக்கு அரசு மருத்துவமனையில் வைத்து பார்த்தேன். என்னை விசாரணை செய்த போலீசார் எத்தனை பட்டை சட்டை போட்டிருந்தார் என்றால் பார்க்கவில்லை. அவர் சாதா போலீசா என்றால் சரிதான். அபிராமத்தில் இருந்து இராமநாதபுரம் வர குறைந்தது 2 மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். யாரெல்லாம் அரசு மருத்துவமனைக்கு வந்தோம் என்றால் நான், என் அம்மா, எனது அக்கா ஆகியோர் சென்றோம்.

2. திருவிழா காலத்தில் மது குடிப்போம். இந்த வழக்கிற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை

போலீசார் சொல்லி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.  இறந்து போன எனது அண்ணன் மது அருந்துவார்.  அவர் இறப்பிற்கு அவர் குடித்த மது தான் காரணம் என்றால் சரியல்ல.